# வள்ளுவர் வரையறுத்த திருக்குறளில் அறிவியல் சிந்தனைகள்

**ந.மோனிகா[1] & முனைவர் இரா.சுப்ரமணி[2]**

**[1] முழுநேர முனைவர் பட்ட ஆய்வாளர்,**

**[2] இணைப் பேராசிரியர்,**

**அரசு கலைக் கல்லூரி (தன்னாட்சி), கரூர் – 639005.**

11

**ஆய்வுச் சுருக்கம்:**

இலக்கினை நோக்கி மனிதர்களை இயக்கவல்லது இலக்கியங்கள் ஆகும். உலக மொழிகளுக்கெல்லாம் தாயக தமிழ் மொழி விளங்குகின்றது. இதில் தரத்திலும் மிகுதியான தகுதியோடும் அமைந்த இலக்கியங்கள் பல உள்ளன. அற இலக்கியங்களில் ஒன்றென கருதப்படும் திருக்குறள் பன்னெடுங்காலத்திற்கு முன்பே இரண்டு அடிகளால் உலகத்தை அளந்ததுள்ளது எனலாம். இக்குறள்களின் மூலம் வள்ளுவன் வாழ்க்கைக்கு தேவையான தத்துவங்கள் , கோட்பாடுகள், நம்பிக்கைகள், ஒழுக்கங்கள் என்பனவற்றை எடுத்துரைத்ததோடு மட்டுமல்லாமல் அறிவியல் நுட்ப்பங்களையும் வழங்கியுள்ளார். அப்படிப்பட்ட அறிவியல் செய்திகளை எடுத்து இவ்வாய்வுக் கட்டுரை மேற்கொள்ளப்படுகிறது.

**முன்னுரை:**

உலகப் பொதுமறை எனப் போற்றப்படும் திருக்குறள் எக்காலத்திற்கும் எந்நாட்டினருக்கும் பயன்படும் நூலாகும். இதில் கூறப்பட்டுள்ள அறிவியல் கருத்துக்கள் காலம் கடந்தும் நிலைத்து நிற்கின்றன. அறிவியல் என்பது இயற்கை மற்றும் சமூக உலகை அறிய உதவும் ஒரு முறையான வழியாகும். அவ்வழிகள் கவனித்தல் , அளவிடுதல், பரிசோதனை செய்தல், மீண்டும் மீண்டும் ஆராய்தல், விமர்சன பகுப்பாய்வு செய்தல் போன்ற பல உள்ளடக்கங்களை கொண்டதாகும். சில நூற்றாண்டுகளுக்கு முன்புதான் அறிவியல் பல புதிய கண்டுபிடிப்புகளை உலகிற்கு தந்தது. ஆனால் காலம் இதுவென சரியாக வரையறுக்க முடியாத பழமை வாய்ந்த திருக்குறளில் அறிவியல் கண்டுபிடிப்புகள் உவமையாக சொல்லப்பட்டுள்ளது வியப்புக்குரியதாகும்.

**கலைச்சொற்கள்**

**பிரபஞ்சம் - உலகம்**

**கருமுகில் - வானம்**

**செவிலி - தாய்**

**கணிதவியல்:**

அறிவியல் மற்றும் தொழில் நுட்பத்தின் மொழியாக கணிதம் கருதப்படுகின்றன. உலகை புரிந்து கொள்வதற்கும், தரவுகளை சேகரித்து மற்றும் பகுப்பாய்வு செய்வதற்கும், நவீன அறிவியலின் அடித்தளத்திற்கும் கணிதம் இன்றியமையாததாகும். எதிலும் முதன்மையாகவும் முக்கியமாகவும் அறிவியல் இருக்க வேண்டும் என்பதனை உணர்த்தும் விதமாக வள்ளுவர்,

"எண்என்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்என்ப வாழும் உயிர்க்கு" (குறள் – 392)

என்னும் குறளில் எழுத்தாகிய இலக்கியத்திற்கு முன் அறிவியலாகிய கணிதத்தை வரிசைப்படுத்தி, இவையே மனிதன் நல்லறிவினைப் பெற உதவும் கண்கள் எனப் போற்றுகின்றார்.

**கோள் அறிவியல்:**

பூமியை தவிர பிற கோள்கள் உண்டு என்பதையும் அதில் நீர் இருப்பதாகவும் பிற உயிர்கள் வாழ்வதற்கு ஏற்ற சூழல் உள்ளதாகவும் இன்றைய விஞ்ஞானிகள் எடுத்துறைக்கின்றனர். ஆனால் விண்கலத்ததினை விண்ணில் ஏவுவதற்கு முன்பே வானுறையும் தெய்வம் என்றும் தேவர்களின் தலைவனான இந்திரன் அகன்ற வானத்தில் உள்ளான் என்றும் தொன்மங்களின் துணைக் கொண்டு வள்ளுவர் எடுத்துக்காட்டியுள்ளார்.

நிக்கோலஸ் கோப்பர் நிக்கஸ் என்பவர் 15ம் நூற்றாண்டில் சூரியன் பிரபஞ்சத்தின் மையத்தில் இருப்பதாகவும், பூமி மற்றும் பிற கிரகங்கள் அதைச் சுற்றி வருவதாகவும் முன்மொழிந்தார். ஆனால் இதற்கும் பல வருடங்களுக்கு முன்பாகவே,

"சுழன்றும்ஏர்ப் பின்னது உலகம் அதனால்
உழந்தும் உழவே தலை" (குறள் – 1031)

என்னும் குறளில் இவ்வுலகம் ஏர்த் தொழிலின் பின் நிற்க்கின்றது எனக் கூறிய

திருவள்ளுவர் சூரியனைச் சுற்றி உலகம் சுழல்கிறது என்பதனை மறைப் பொருளாக கூறுகின்றார். மேலும் 'ஞால்' என்னும் சொல்லினை உலகத்தை குறிக்கும் இடங்களில் வெளிப்படையாய் பயன்படுத்தியுள்ளார். இதற்கு எந்த விதமான பிடிப்பும் இல்லாமல் தொங்குதல் என்று பொருள் உண்டு. இவ்வாறு பூமியின் தோற்ற அமைப்பையும் வள்ளுவர் எடுத்துரைக்கிறார்.

இதனையே மாணிக்கவாசகர் தனது திருவாசகத்தில்,

"அண்டப் பகுதியின் உண்டைப் பிறக்கம்" (திருஅண்டப் பகுதி)

என்னும் வரிகளில் எண்ணற்ற அளவில் உள்ள அண்டத்தின் ஒரு பகுதி உருண்டை வடிவில் கூட்டமாக ஒளிக்குவியலாக உள்ளது எனக் கூறுகிறார்.

**புவி அறிவியல்:**

புவிஅறிவியல் என்பது புவியியல் , கடலியல், வானிலையியல், வானியல், சுற்றுச்சூழலியல் போன்ற துறைகளை உள்ளடக்கியது ஆகும். வெயில் வெம்மைத் தன்மை உடையது , அது புழுக்களை மட்டும்மல்ல மனிதனையும் சுட்டெரிக்கும் தன்மை வாய்ந்தது என எச்சரித்த வள்ளுவர்,

"நெடுங்கடலும் தன்நீர்மை குன்றும் தடிந்தெழிலி
தான்நல்கா தாகி விடின்" (குறள் – 17)

என்னும் குறளில் கடலானது வற்றும் என்றும் அதன் காரணத்திற்கு நீர் ஆவியாதலையும் எடுத்துரைக்கின்றார். தடிந்தெழிலி என்னும் சொல்லுக்கு கடலில் உருவாகும் மேகம் என்றொரு பொருள் உண்டு. கருமுகில் என்னும் இச்சொல்லினை ஆங்கிலதில் 'நிம்போஸ்ட்ராடஸ்' என்பர். இவ்வாறு மேகத்தின் வகையினைக் கூறி கடல் நீரை முகந்து சென்று அம்மேகம் மழையினை பொழிகிறது என்று ஆவியாதலை குறிப்பிட்டுள்ளார்.

**இயற்பியல்:**

ஐசாக் நியூட்டனின் மூன்றாவது விதியான 'ஒவ்வொரு வினைக்கும் அதற்கு இணையான எதிர் வினை உண்டு' என்பதனை

"பிறர்க்கின்னா முற்பகல் செய்யின் தமக்கின்னா
பிற்பகல் தாமே வரும்" (குறள் – 319)

என்னும் குறளில் இக்கருத்தினை வள்ளுவர் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னமே

கணித்து எழுதியுள்ளதாக அறிஞர்கள் பலர் கருதுகின்றனர்.

குறிப்பறிதல் அதிகாரத்தில் காதலரில் ஒருவர் கண்ணோடு மற்றொருவர் கண்ணும் பார்வையால் பேசிவிட்டால் அதற்கு பிறகு வாய்ச் சொற்களால் ஒரு பயனும் இல்லை என்னும் கருத்தினைக் கொண்ட குறள் மூலம் ஒளி மற்றும் ஒலியினை வரிசைப்படுத்தியுள்ளார்.

**தாவரவியல்:**

18ம் நூற்றாண்டில் நீர் வாழ்த்தாவரங்களின் உடற்கூறுகள் பற்றிய ஆய்வில் நீரின் உயரம் கூடும் போது தாவரத்தின் உயரம் கூடும் அதுவே நீரின் உயரம் குறையும் போது தாவரத்தின் உயரமும் குறையும் என்ற அறிவியல் கண்டறியப்பட்டது. ஆனால் இதனை திருவள்ளுவர்,

“வெள்ளத்து அனைய மலர்நீட்டம் மாந்தர்தம்
உள்ளத்து அனையது உயர்வு” (குறள் – 595)

என்னும் குறளில் ஊக்கம் மிகுந்த மனிதனின் உயர்வை நீர்ப்பூக்களின் தாளினது நீளங்களுக்கு உவமையாக்கியுள்ளார். இது போன்ற பல குறள்களில் வாழ்க்கை தத்துவங்களை கூறி அறிவியலை உவமைகளாக கையாண்டுள்ளார்.

**மருத்துவம்:**

மருந்து என்னும் அதிகாரத்தில் காணப்படும் பத்து குறட்பாக்களும் மருத்துவத் துறையின் கோட்ப்பாடுகள் ஆகும். செரிமானத்திற்கு பிறகு உண்ணும் உணவு முறையினை கடைப்பிடித்தால் நெடுநாள் வாழலாம் என்னும் அடிப்படை மருத்துவத்தினை எடுத்துரைப்பதோடு மட்டுமல்லாமல் நோய் என்ன ? அதற்கான அடிப்படை காரணம் என்ன ? அநோயினை தீர்க்கும் வழி என்ன ? என்பதனை ஆராய்ந்து சிகிச்சையினை மேற்கொள்ள வேண்டும் என வலியுறுத்துகிறார். மேலும் நோயாளி , மருத்துவன், மருந்து, உழைச்செல்வான் என்னும் செவிலி என்று நான்கு கூறுகளாக மருத்துவமுறையை அமைத்து மருத்துவத்தின் மாமேதையாக வள்ளுவர் திகழ்கின்றார்.

**தொகுப்புரை:**

பொன்னானது தீயில் சுடச்சுட அதன் மாசு கரைந்து ஒளிப்பெருகும் என்னும் இரசவாதத்தின் விதிகளை உணர்த்தும் திருக்குறளில் ஆராய்ச்சியினை மீண்டும் மீண்டும் மேற்கொள்வதன் மூலம் எண்ணில் அடங்காத அறிவியல் சிந்தனைகைளை காண்முடியும். ‘பழமையே புதுமைக்குத் தாய் ’ என்ற கூற்றுக்கிணங்க பல புதிய அறிவியல் செய்திகள் , பழமை வாய்ந்த திருக்குறளில் உவமைகளாக் சுட்டிகாட்டப்பட்டுள்ளது.

**துணை நூற்பட்டியல்:**


1. திருக்குறள் - வ.சுப.மாணிக்கனார்
   சாரதா பதிப்பகம்,
   3, ஸ்ரீ கிருஷ்ணாபுரம் தெரு,
   ராயப்பேட்டை, சென்னை-14.
2. திருவாசகம் சில சிந்தனைகள் - அ.ச.ஞானசம்பந்தன்
   கங்கை புத்தக நிலையம்,
   13, தியாக்ராய நகர்,
   சென்னை -17.